பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

விலை ரூபா 3·50

# உதயன்

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஜப்பசி மீ 14 வ புதன்கிழமை (31 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 11 கதிர்: 238

# யாழ். ஆஸ்பத்திரியை இன்று செஞ்சிலுவைச் சங்கம் ஏற்கும்

## திங்கள் முதல் அங்கு சிகிச்சை

யாழ்ப்பாணம், அக். 31

யாழ். போதனா ஆஸ்பத்திரியை இன்று காலை 8 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்கும் என அறிய வருகிறது.

அதன் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை (5ஆம் திகதி) முதல் அங்கு சிகிச்சைகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று காலை ஆஸ்பத்திரி பொறுப்பேற்கப்பட்டதும் செஞ்சிலுவைக் கொடிகள் ஆஸ்பத்திரிப் பகுதியில் 5 இடங்களில் பெரிய அளவில் பறக்க விடப்படும்.

அத்துடன் ஆஸ்பத்திரியைச் சூழ உள்ள அமைதிப்பிரதேசத்தில் ஆங்காங்கே வெள்ளைக் கொடிகளும் பறக்க விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

நோயாளருக்கான சிகிச்சைகளை எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் அங்கு ஆரம்பிப்பது என முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இயங்கும் போதனா ஆஸ்பத்திரிப் பிரிவில் நேற்று நடந்த டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது

திங்கட்கிழமையன்று வெளிநோயாளர் பகுதி, குழந்தைகள் வார்ட், வைத்திய வார்ட் ஆகிய மூன்று பிரிவுகளிலும் சிகிச்சைகள் ஆரம்பமாகும்.

ஏனைய பிரிவுகளும் கிளினிக்குகளும் படிப்படியாக மூன்று தினங்களில் அங்கு மாற்றப்பட்டுவிடும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

[அ-உ-3-5-15]

## ஆஸ்பத்திரிக்குள் செல்ல ஒரு வழிமட்டுமே இருக்கும்

யாழ்ப்பாணம், அக். 31

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு யாழ். ஆஸ்பத்திரியைப் பொறுப்பேற்ற பின்னர், அது இயங்க ஆரம்பிக்கும்போது ஆஸ்பத்திரிச் சூழலில் பல புதிய ஒழுங்குகள் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வரும்.

அவற்றின் விவரம் வருமாறு:-

✶ சகல நோயாளர்களும் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவினூடாகவே வார்டுகளில் அனுமதிக்கப்படுவர்.

★ ஆஸ்பத்திரிக்குள் சென்று வருவதற்கு ஒரு வழியே பயன்படுத்தப்படும். யாழ். செஞ்சிலுவை சங்கத்தின் தொண்டர்கள் அங்கு ஒழுங்கு கட்டுப்பாட்டைப் பேண உதவுவர்.

★ ஆஸ்பத்திரிக்குள் செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள், வைத்தியசாலை அம்புலன்ஸ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நோர்வே கட்டிக் கொடுத்த வீடுகள் தரைமட்டம்

யாழ்ப்பாணம், அக். 13

காங்கேசன்துறைப் பகுதியில் நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தில் உள்ள வீடுகள் பலவும் இராணுவத்தினரால் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன:

அத்துடன் அங்கு இயங்கி வந்த ஆரம்பசுகாதார நிலையமும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளது

மிகவும் பின்தங்கிய இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்துமுகமாக நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் இந்தக் குடியேற்றத் திட்டத்தை அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (அ-5 3)

## 20 மெற்றிக் தொன் மருந்து "லங்காசிறியில்" வந்தது

யாழ்ப்பாணம், அக். 31

நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்த 'லங்கா சிறி' கப்பலில் 20 மெற்றிக் தொன் மருந்து வகைகள் வந்துள்ளன.

இந்தக் கப்பலில் வந்துள்ள ஏனைய பொருள்களின் விவரம் வருமாறு:-

அரிசி – ஆயிரம் தொன், மா – ஆயிரம் தொன், சீனி – 400 தொன், பருப்பு- 100 தொன், பாசிப்பயறு- 40 தொன், பால்மா – 6 தொன், மண்எண்ணெய்- 100 பரல்கள்.

இவை தவிர 162 தபாற் பொதிகளும் வந்து சேர்ந்தன.

'லங்கா சிறி' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-6)

## மட்டக்களப்பு வீதிகளில் தமிழர்களின் சடலங்கள்

மட்டக்களப்பு, அக். 31

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த வாரத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 5 தமிழர்களின் சடலங்கள் வீதிகளில் கிடக்கக்காணப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவிற்கு அருகில் இரு சடலங்களும், அரசடி மகாவித்தியாலயப் பகுதியில் இரு சடலங்களும் திருப்பெருந்துறையில் ஒரு சடலமும் கிடக்கக் காணப்பட்டன.

புதன்கிழமை இரவு இப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், காலையில் வீதிகளில் சடலங்களைக் கண்டதாகவும் அவ்வப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

தேவராஜா முருகுப்பிள்ளை (திருப்பெருந்துறை), மாரிமுத்து முருகமூர்த்தி (திருப்பெருந்துறை), வேலுப்பிள்ளை கைலாயநாதன் (கல்லடி), தம்பிராஜா சின்னராஜா (கல்லடி), கணபதிப்பிள்ளை ஜீவகுமார் ஆகியோரே கொலையுண்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டது. (அ-5)

## படையினருடன் தேவானந்தா காங்கேசன்துறை வந்தார்

வலி. வடக்கில் கடந்த வாரத்தில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்ற சமயம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ. பி. டி. பியின்) செயலதிபர் திரு. டக்ளஸ் தேவானந்தாவும் இராணுவத்தினருடன் காங்கேசன்துறைக்கு வந்திருந்தார்.

அந்த அமைப்பின் அரசியல் செயலர் ரமேஷ் இத்தகவலை வெளியிட்டார். (உ)

## அயோத்தி பாப்ரி மசூதியில் படையினர் சூடு! ஐவர் பலி!!

அயோத்தியில் நேற்று பாப்ரி மசூதி பகுதியில் பலவந்தமாக நுழைந்தவர்கள் மீது பொலீஸார் சுட்டதில் ஐவர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இவ்வாறு நுழைந்தவர்கள் பாதுகாப்பு படையினரால் விரட்டியடிக்கப்பட்டனர் என்றும் மசூதிக்குச் சேதமேற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மசூதிப் பகுதியில் இந்துத் தீவிரவாதிகள் காவிக்கொடியை ஏற்றினர் என்று பி. ரி. ஐ அறிவித்தது. (உ-ஏ)

## ஆசிரியர் கைது

யாழ்ப்பாணம், அக் 31

களுதாவளை மகா வித்தியாலய ஆசிரியர் பாஸ்கரன் என்பவர் அப்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் காலையில் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்

இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்து வந்த தமிழ் இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்களும் இவரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## பெரியகல்லாறு சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், அக். 31

கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு ஆகிய பகுதிகளில் சுற்றிவளைத்த படையினர் அங்கிருந்த 15 பொதுமக்களைக் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 13பேர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். மற்றைய இருவரும் நீலாவணை இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மூன்று தமிழர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், அக். 31

நேற்று முன்தினம் நண்பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பு மண்முனைத் துறையிலிருந்து படகு ஒன்றில் புறப்பட்டுச் சென்ற மூன்று தமிழர்கள் கடற்படையினரால்சுட்டுக்கொல்லப்பட்டனர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (உ)

## மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுக் கடும் மோதல்

யாழ்ப்பாணம், அக். 31

மாவிட்டபுரம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஷெல்த் தாக்குதலை நடத்தியவாறு முன்னேற முயன்றனர். அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையே அப்பகுதியில் கடும் சண்டை மூண்டது.

சுமார் மூன்று மணி நேரம் நடந்த கடும் சண்டையின் பின் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

இதேவேளை நேற்று நண்பகல் 12 மணியளவில் காங்கேசன்துறை – கீரிமலை வீதியிலுள்ள கிருஷ்ணன் கோவில் பகுதியில் உள்ள இராணுவத்தினரும் முன்னேற முயற்சித்தவேளை அப்பகுதியிலும் சண்டை நடைபெற்றதாகத் தெரியவந்தது.

நேற்று மாலை வரை தொடர்ந்து இப்பகுதிகளிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. (உ-5 3)

## ஈராக் ஜனாதிபதி சதாம் போர் முரசு கொட்டுகிறார்

பக்தாத், அக். 31

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தனது முப்படைகளையும் உஷார் நிலையில் இருக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார். போர் முரசைக் கொட்டத் தொடங்கிவிட்டார்.

அடுத்த சில தினங்களில் எதிரிப்படைகள் குவைத் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடும் என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் —

அதனைத் தொடர்ந்தே இந்த உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் — கூறப்படுகிறது.

ஈராக் கூட்டுப்படைகள் தளபதிகள் உயர் மாநாடு நேற்று நடைபெற்றது. கூட்டுப் படைகளின் பிரதம தளகர்த்தரான ஜனாதிபதி சதாம் ஹுசேன் இம் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

[அ-ஏ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### போட்டோபிரதிகள்

தரமான போட்டோ பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள் 'மண்டேலாரேட்டர்' 550/8A கே. கே. எஸ். வீதி. [தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்] 256/A, பருத்தித்துறை வீதி, (தேரடி முன்பாக) நல்லூர் யாழ்ப்பாணம். [14550]

### விற்பனையாளர் தேவை

பாவனைப் பொருள்களை வீடுகளுக்குச் சென்று விற்பதற்குப் பெண் விற்பனையாளர்கள் தேவை. திறமையுள்ளவர்கள் நல்ல கொமிசன் பெறலாம் விண்ணப்பிக்கவும் 151. C/o உதயன். (சி/5350)

### கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும் அடையாள அட்டைகட்கு லமினேட் செய்து கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ் இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (சி-5355)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

காசிப்பிள்ளை நாகேஸ்வரா என்னும் பெயருடைய அடையாள அட்டையும் அதனுடன் சில முக்கிய ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: M சிவகுமார், கோப்பாய் ரெக்ஸ், [நாவலடி] கோப்பாய். (14598)

### Opening of the Faculty of Agriculture, Kilinochchi

Lectures for the first year students of the Faculty of Agriculture which was scheduled to commence on 5th Nov. 1990, will commence on 3rd Dec. 1990 at Agricultural Research & Training Institute (in service) Iranamadu Junction, Kilinochchi.

Vice-Chancellor
University of Jaffna,

1990-10-29

[C-5351]

### கிளிநொச்சி விவசாய பீட ஆரம்பம்

1990 நவம்பர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த கிளிநொச்சி விவசாய பீட முதலாமாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் 1990 டிசம்பர் 3ஆம் திகதி கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் அமைந்துள்ள "சேவைக் காலப்" பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகும்.

துணை வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

1990 - 10 - 29

[சி-5352]

# அரசாங்க அறிவித்தல்

## சுகாதார சேவைகள்

கிளிநொச்சிப் பகுதியில் அண்மைக் காலத்தில் நடைபெற்ற கலவரம் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை இயங்கமுடியாத நிலையில் இருந்தது. தற்பொழுது நிலைமை சீரடைந்து மேற்படி வைத்தியசாலை கிளிநொச்சியில் இயங்கத் தொடங்கிவிட்டது.

எனவே அங்கு கடமை புரிந்த சகல ஊழியர்களும் உடனடியாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமைக்கு சமூகம் அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

29-10-90

(C/5356)

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்:
07 - 02 - 1909

மறைவு:
03 - 10 - 1990

## அமரர். பொன். பாலசுந்தரம் J. P

(முன்னாள் விதானையார்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

எதிர் வரும் வியாழக்கிழமை 01 - 11 - 90 எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், வீட்டுக் கிருத்தியத்திலும், அதன்பின் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்குமாறும் நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பாலசுந்தரம் சதுக்கம்,
மூன்றாம் சந்தி,
தொண்டமனாறு

[14597]

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
20 - 06 - 1952

மறைவு:
21 - 09 - 1990

திரு.

## அன்ரனி எட்வேட் மரியநாயகம்

(உதவிப் பொறியியலாளர் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை)

அன்பின் உருவாய், பண்பின் பதிவிடமாய், அமைதியின் உறைவிடமாய், புன்சிரிப்புத் தவழும் முகத்துடன் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் இறைபதமடைந்து இன்றுடன் 41 நாள் ஆகின்றது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

இவரின் ஈமச் சடங்கில் பங்கு கொண்ட உறவினர், நண்பர்கள், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை அதிகாரிகள், ஊழியர் அனைவருக்கும் எம் உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்பு மனைவி,
மகன், உறவினர்.

[14586]

# WANTED

Female, Hindu, Ceylon Tamil 23 years old student (counsellor) living in Canada, would like to correspond for possible marriage with a professionally educated male who has studied overseas (England, Australia, United States, or Canada). He should also of the same vella caste, race and religion. Must bebetween 24—30 years.

Please Reply to: 223 - 4609,
Kingsway, Burnaby B. C.
Canada V5H 4L3.

[14596]

தென்னிந்திய திருச்சபை
யாழ் - மறைமாவட்டம்

## 43 ஆவது வருடாந்த விழா

இவ்விழா நவம்பர் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை (மறைந்த ஆன்மாக்கள் அனைவரினதும் தினம்) வட்டுக்கோட்டை பேராலயத்தில் நடைபெறும்

**நிகழ்ச்சி நிரல்**

மு. ப. 8.30 நற்கருணை வழிபாடு
யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வணக்கலாநிதி. எஸ். ஜெபநேசனின் கருத்துரை அபிடேகம்.

மு. ப. 10.00 பகிரங்கக் கூட்டம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அ. ஜெயக்குமார்,
செயலாளர்:
J. D C S. I.

29 - 10 - 1990
(C/5354)

# Computer Programming
## BASIC Language

## புதிய பிரிவு

ஆரம்பம்: 01-11-1990

நேரம்: 9.00 மணி
கட்டணம்: மாதம் 300/-

மேலும் விபரங்கட்கு:

**School of Business Administration**
16, 3rd Cross Street,
Jaffna.

[சி-5349]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 07 | 03 |
| 10 | 10 |
| 1913 | 1990 |

அமரர்

## திருமதி சதாசிவம் செல்வநாயகம்

அவர்கள்

(மீசாலை)

**திதி: புரட்டாசி பூர்வபக்கச் சதுர்த்தசி**

கொக்குவில் இந்துக் கல்லூரியில் முப்பது ஆண்டுகள் வரை பாலரை பயிற்றும் சிறப்பாசிரியராகக் கடமையாற்றி 'பள்ளிக் கூடத்தக்கா' என அன்பாக அழைக்கப்பட்டவரும் மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இளைப்பாறியவருமாகிய எமது அன்புத் தாயாருக்கு எமது கண்ணீர் அஞ்சலி 7 - 10 - 1913 ல் தோன்றி 03 - 10 - 1990ல் இயற்கை எய்திய எமது பேரன்புக்குரிய அன்புத் தாயார் திருமதி சதாசிவம் செல்வநாயகம் அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் 1 - 11 - 90 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்ச்சியிற் பங்குபற்றி அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
கணவன், மக்கள், மருமக்கள்.

வங்களா வீதி,
மீசாலை தெற்கு, மீசாலை.

(14600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலியல் ஆபத்து

வல்லை, கல்லுண்டாய், மண்டைதீவு ஆகிய மூன்று பெரிய வெளிகளிலும் மர நடுகைத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் அந்தந்தப் பகுதி சனசமூக நிலையங்களை ஈடுபடுத்தவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முடிவுசெய்திருக்கிறார்.

கொள்கை அளவில் இந்தத் திட்டம் வரவேற்கத்தக்கது. மக்கள் ஆதரிக்கவேண்டிய ஒன்று. ஆனால் இது வெறும் காகிதத்திலும், பத்திரிகையிலும், வாயளவிலும் நின்றுவிடாமல் உரிய முறையில், தக்க வழியில், நன்றாகத் திட்டமிடப்பட்ட ரீதியில் செயல்வடிவம் எடுக்குமா என்பதிலேயே அதன் வெற்றி தங்கி உள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்த மட்டில் பல திட்டங்கள் குறித்து பேசப்படுவதுண்டு; எழுதப்படுவதுண்டு; ஆனால் செயல்வடிவம் எடுப்பது மிகமிக அரிது.

தமிழ்ப் பிரதேசத்தில் மலைகள் இல்லை; ஆறுகள் குறைவு. வடபகுதியிலே ஆறு ஒன்று தானும் கிடையாது. அது வானம் பார்த்த பூமியாக — ஆகாயம் தரும் மழையை மட்டுமே நம்பி உள்ளது. ஆனால் இப்பகுதிகளில் மழை வீழ்ச்சியோ வருடாந்தம் குறைந்து கொண்டே செல்கிறது. மாரி என்ற பருவகாலமே மறைந்துபோய் விடுமோ என்று ஏங்கும் அளவுக்கு மழை குறைந்து கொண்டேபோகிறது. இன்னும் சில வருடங்களில் வடக்கு வனாந்தரம் ஆகிவிடுமோ என்ற அளவுக்கு வரட்சிக் காலம் அதிகரித்துச் செல்கிறது.

இத்தகைய ஒரு சூழலில் பாதிப்பைக் குறைப்பதற்கு மரநடுகை பரந்த அளவில் மேற்கொள்ளப்படுவது அவசியம். மரம் இல்லாத பூமிக்கு எங்கே மழை? மழை பொழியாத பூமியில் மரம் முளைப்பது எப்படி?

இதனை எமது மக்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. முன்னோர், முதியோர் நட்டுவைத்த மரங்களை வெட்டித் தறித்து உடனடித் தேவையைப் பூர்த்திசெய்ய நினைக்கிறார்களே அன்றி நீண்டகாலப் பாதிப்பை உய்த்து உணர்வோர் மிகமிகச் சிலரே.

புதிதாகப் பத்து மரங்களை நட்டு வளர்த்த பின்னரே ஒரு மரத்தை வெட்டுவோம் என்று ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டும். அப்போது தான் சராசரி மழையை யாவது எங்கள் பூமியில் எதிர்பார்க்க முடியும். அவ்வாறிருக்க வளர்ந்த மரங்களை எல்லாம் தறித்து வீழ்த்தினால் மழை பெய்வது எப்படி?

எனவே பெரு வெளிகளில் வெறும் மர நடுகை என்று ஆரம்பிப்பதற்குப் பதிலாக திட்டமிட்ட, அடிப்படையில் சமூக காடு வளர்ப்புத் திட்டங்களைத் தொடங்குவதே நல்லது. மர நடுகையே வெறும் வளவுகள், வீடுகள்தோறும் ஆரம்பிக்கலாம். மரநடுகையின் போது பொருளாதார ரீதியாகப் பயன்தரக் கூடிய மரங்களை நடுதல் மேலும் பயன் தரும்.

தமிழ்ப் பிரதேசத்தில் வாழும் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையிலும், கூட்டு அடிப்படையிலும் மரநடுகையில் மனம் செலுத்தி ஈடுபட வேண்டும். இனியும் அதில் அக்கறை செலுத்தாமல் இருப்பின் பெரும் சூழலியல் ஆபத்தில் மாட்டிக் கொள்வோம் என்பதை மறந்து விடக் கூடாது.

## உணவுக் கப்பல்

யாழ்ப்பாணம், அக். 31

தலைமன்னார் துறைமுகத்துக்கு 430 தொன் உணவுப் பொருள்களுடன் கப்பல் ஒன்று வந்து சேர்ந்தது. பொருள்கள் இறக்கும் வேலைகளும் ஆரம்பமாகின.

போதிய டீசல் கப்பல் மூலம் கொண்டுவரப்படாததால் மின், நீர் விநியோகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# அனலைதீவு சென்ற பயணிகள்மீது நடுக்கடலில் கடற்படையினர் தாக்கு!

### தம்மிடம் அனுமதி பெறவேண்டும் எனவும் எச்சரிக்கை

புளியங்கூடல், அக். 31

அனலைதீவுக்குச் சென்ற பயணிகள் கடற்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர். குருவிலில் இருந்து அனலைதீவு சென்றவர்களே தாக்கப்பட்டவர்கள் ஆவர்.

கடந்த வெள்ளிக்கிழமை (26 ஆம் திகதி) இரவு சுருவில் துறையிலிருந்து படகு ஒன்று இருபதிற்கும் மேற்பட்ட பயணிகளுடன் அனலைதீவு நோக்கிப் புறப்பட்டது.

படகு நடுக்கடலில் சென்றுகொண்டிருந்த வேளை, அங்கு திடீரென வந்த கடற்படைப் படகு, அதனை வழிமறித்தது. கடற்படையினர் படகில் இருந்தவர்களை மிகக் கடுமையாகத் தாக்கினார்கள். படகு எங்கே செல்கிறது என்று கேட்டுச் சோதித்தார்கள். பயணிகள் வைத்திருந்த பணம் மற்றும் பொருள்கள் சூறையாடப்பட்டன.

தாக்குதலைத் தாங்க முடியாமல் பயணிகள் அழுது குளறினார்கள். அதைத் தொடர்ந்து படகை அனலைதீவுக்குச் செல்லவிடாது சுருவிலுக்குப் போகுமாறு ஆயுத முனையில் திருப்பி அனுப்பினார்கள்.

தாம் காரைநகர்க் கடற்படையினர் என்று கூறிய அவர்கள், அனலைதீவுக்கு இனிமேல் கடற்படையின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என்று எச்சரித்தனர். (அ-ரி)

## இரவில் பீரங்கித் தாக்குதல்

வல்வெட்டித்துறை, அக். 31

வடமராட்சி கிழக்குப்பகுதி கடலில் ரோந்து செல்லும் கடற்படை பீரங்கிக் கப்பலில் இருந்து இரவு வேளைகளில் அடிக்கடி பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இக்குண்டுகள் உடுத்துறை, செம்பியன்பற்று, நாகர்கோவில் தாளையடி, மாமுனை குடத்தனைப் பகுதிகளில் விழுந்து வெடிப்பதால் இப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் பதுங்கு குழிகளில் தஞ்சம் அடைகின்றனர். (இ-117)

## செயலகக் கதவுகளின் பிணைச்சல்கள் மறைவு

யாழ். செயலகத்திலுள்ள மலசலகூட கதவுகளின் பித்தளைப் பிணைச்சல்கள், ஆணிகள், யன்னல் கொழுக்கிகள், தண்ணீர்ப் பைப்புகள் யாவும் மாயமாய் மறைந்துள்ளன.

இதனால் சுமார் பத்துக்கு மேற்பட்ட கதவுகள் கழற்றி சுவருடன் சாத்தி வைக்கப் பட்டுள்ளன. மேலும் யன்னல்களின் கொழுக்கிகள் கழற்றப்பட்டதனால் அவை திறந்த நிலையில் உள்ளன. பத்துக்கும் அதிகமான தண்ணீர்ப் பைப்புகள் கழற்றப் பட்டுள்ளதனால் ஊழியர்கள் தண்ணீர் பாவிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

அண்மையில் இப்பகுதியில் ஏற்பட்ட விமானத்தாக்குதலினால் செயலகத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனைப் பயன்படுத்தி இத் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. [இ-100]

## மின்மாற்றி ஒயில் திருட்டு

கொழும்புத்துறை, அக். 31

உரும்பராய் பட்டினசபைப் பிரதேசத்தில் ஐந்து மின்மாற்றிகளில் "ஒயில்" திருடப் பட்டுள்ளது.

இதனால் இப்பகுதிக்கு மின்சாரம் கிடைப்பதற்கு நீண்ட நாட்கள் செல்லுமென்று தெரிவிக்கப்படுகிறது. (இ-30)

## நோயாளர் நாளை வியாழன் கொழும்பு செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 31

அவசர மற்றும் அத்தியாவசிய சிகிச்சைகளுக்குக் கொழும்புக்குச் செல்வதற்குச் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்கள் நாளை வியாழன் காலை 7 மணிக்கு மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், வசதிப்படி யாழ்ப்பாணம் கண்டி வீதியில் உள்ள யாழ் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திலும் சமுகமளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல் நாளை காலை பருத்தித்துறையிலிருந்து புறப்படும்.

நோயாளருடன் கூடச்செல்லும் உறவினர்கள் தங்களுக்கும் நோயாளருக்கும் 3 நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள், குடிதண்ணீர் என்பனவற்றையும், ஒருவாரத்துக்குத் தேவையான மருந்து வகைகளையும் கொண்டுவருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நோயாளருடன் கூடச்செல்வோரின் பிரயாணத்தை உறுதிப்படுத்தி ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கடிதம் ஒன்றை வழங்குவார்.

கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் தாமதமடைந்ததால், புதன் கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பயணம் வியாழக்கிழமைக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-15)

# கிரனேட் குண்டு மழையின் மத்தியில் மதில் ஏறிப் புகுந்த புலிகளின் தீரம்!

### (VIII)

யாழ் கோட்டையைச் சூழவுள்ள பகுதிகள் விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களினால் பெரிதும் சேதமுற்றிருந்தன. குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்தப் பகுதிகள் ஊடாக இருட்டில் கவச வாகனங்களை ஓட்டிச் செல்வது இயலாத காரியமாக இருக்கும்.

அதனால் நிலவின் ஒளி நிறைந்த நாளில் தாக்குதலை நடத்தப் புலிகள் திட்டமிட்டனர்.

ஆனால் அந்த நிலவு ஒளியே தாக்குதலுக்கு சிக்கலாக அமைந்துவிட்டது.

பெரும் அமைப்புக் கொண்ட - கவச வாகனங்களாக உருமாற்றம் செய்யப்பட்ட - பாரம் தூக்கிகளும், புல்டோஸர்களும் அசைந்து கோட்டையை நோக்கி முன்னேறுவதை நிலவு ஒளி காட்டிக் கொடுத்துவிட்டது.

நிலவு ஒளியாலும், அவ்வப்போது கோட்டையிலிருந்து ஏவப்பட்ட "பரா" வெளிச்சக் குண்டுகளினாலும் ஸ்ரீலங்கா விமானப்படைகள் கோட்டைப் பகுதியைத் தவிர்த்து அதன் சுற்றுப் புறத்தை இலக்கு வைத்துத் தாக்குவது இலகுவாயிற்று.

கோட்டையை நோக்கிச் சென்று கொண்டிருந்த புலிகளின் கவச வாகனங்களை இலக்கு வைத்துக் கண்டுபிடிக்கவும் அது எழியாயிற்று.

### கவச வாகனத்தை நோக்கிக் குண்டு

பொலீஸ் நிலையப் பின் பக்கத்திலிருந்து கடற்கரை வீதி வழியாக கோட்டையின் தென் புறத்தை (பிற் பகுதியை) நோக்கிச் சென்ற கவச வாகனம் ஒன்றை பொம்மர் ஒன்று இலக்கு வைத்துக் குண்டு வீசியது; கவச வாகனத்துக்கு முன் பகுதியில் அந்தக் குண்டு விழுந்து வெடித்தது.

கவச வாகனம் மிக உறுதியானதாகத் தயாரிக்கப்பட்டிருந்தால் முன்னால் விழுந்த குண்டுக்கு அது ஓரளவு தாக்குப்பிடித்துக் கொண்டது.

ஆனால் விமானக் குண்டு வெடிப்பின் அதிர்ச்சியினால் அதனை ஓட்டி வந்த போராளி மயங்கிச் சாய்ந்தார்.

அதனால் அந்தக் கவச வாகனம் கோட்டைப் பின்புறத்தை எட்டுவது தாமதமானது.

இப்படி நிலவு வெளிச்சம் படையினருக்கு சாதகமாய் அமைந்த போதும், விடுதலைப் புலிகள் தமது தீரம் மிக்க தாக்குதலை சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள்.

அந்தத் தாக்குதலின் விளைவுகள் கோட்டையைச்

### கோட்டைப் பக்கம் நேரடிப் பார்வை

சூழவுள்ள பகுதிகளில் தெளிவாகத் தெரிந்தது.

புலிகள் ஓட்டிவந்த இரண்டு கவச வாகனங்கள் கோட்டையின் தென் பகுதிச் சுவருகே சேதமுற்று, சின்னாபின்னமாகி, சிதைவுற்றுக் கிடக்கக் கண்டேன்.

அந்த வழியாக கோட்டைக்குள் செல்வதற்கு முயன்ற போராளிகள் மீது, கொத்தளத்திலிருந்த படையினர் கிரனேட் மழை பொழிந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தோம் அல்லவா?

அந்தக்கொத்தளப்பகுதியில் சிறிய வெற்றுப்பெட்டிகள் பல நூற்றுக்கணக்கில் சிதறிக் கிடந்தன. அதில் ஒன்றை எடுத்துப் பார்த்தேன். அந்தப் பெட்டியின் வெளியே ஆங்கிலத்தில் "Hand Gren-ade" என்று பொறிக்கப்பட்டிருந்தது. அதன்வகை, அளவு மற்றும் விவரங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

அருகிலிருந்த போராளி ஒருவர் அது ரை. ஆர். ஜி. கிரனேட் அடைத்துவரும் பெட்டி என்று எனக்கு விளக்கமளித்தார்.

அந்தப் பெட்டிகள் நூற்றுக்கணக்கில் நிறைந்து கிடந்த அந்தக் கொத்தளத்தில் கிரனேட் மழை எப்படிப் பொழிந்திருக்கும் என்பதை மனக் கண்ணில் ஒரு தடவை நிகழ்த்திப் பார்க்க முடிந்தது.

இந்த கிரனேட் மழையைப் பிய்த்துக் கொண்டு தான் அந்த ஐந்து போராளிகளும் கோட்டைச் சுவர் ஏறி அதன் ஒருகொத்தளத்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் வீரம்தான் என்னே!

முனியப்பர் கோவில் அருகிலும் றீகல் தியேட்டர் முன் பக்கத்திலும் முற்றவெளியில் கவசவாகனங்களாக உருமாற்றப்பட்ட இரண்டு புல்டோஸர்கள் காணப்பட்டன. அவற்றினுள் இருப்போரை பாதுகாக்கக் கூடியதாக மண் மூடைகள் அடுக்கப்பட்டிருந்ததையும் கண்டேன்.

அந்தக் கவசவாகனங்கள் கோட்டையை நோக்கி முன்னேறும் முயற்சியை விமானத் தாக்குதல்களினால் கைவிட்டனவா அல்லது வேறு காரணங்களினால் முயற்சி கைவிடப்பட்டதா என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை.

ஆகஸ்ட் 5 ஆம்திகதி தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் கோட்டையைக் கைப்பற்ற தவறிவிட்டார்கள் என்றாலும் அவர்கள் ஸ்ரீலங்கா படைகளுக்கு ஒரு பாடத்தை அந்தத் தாக்குதலில் புகட்டினார்கள்.

"கோட்டையில் ஸ்ரீலங்காப் படைகள் இனிமேலும் தங்கியிருப்பது அவர்களுக்கு நித்திய கண்டம்தான்" - இதுவே புலிகள் புகட்டிய பாடம்.

இந்தத் தாக்குதலை அடுத்து கோட்டையிலிருக்கும் படையையும் உள்ளேயிருக்கும் பெறுமதிமிக்க பொருள்களையும் பாதுகாப்பாக மீட்டெடுப்பதைத் தவிர வேறுவழியில்லை என்ற இறுதி முடிவுக்கு ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படை வந்தது.

கோட்டை மீட்புப் படலம் நடந்தது எப்படி? அடுத்த தொடரில் பார்ப்போம்.

(வளரும்)

- கூர்விழியான் -

## மீனவர்மீது தாக்குதல்

மாங்குளம், அக். 31

பருத்தித்துறை மீனவர்கள் கடலில் வைத்து கடற்படையால் தாக்கப்பட்டனர்.

கடந்த 27 ஆம் திகதி இச் சம்பவம் இடம்பெற்றது. (இ-94)

## டீசல் நன்கொடை

யாழ்ப்பாணம், அக். 31

கடந்தகாலங்களில் இக்கட்டான வேளைகளில் பொது மக்களுக்கு சேவையாற்றிய தனியார் வைத்திய நிலையங்களுக்கு செஞ்சிலுவை சங்க சர்வதேசக்குழு 60 லீற்றர் டீசலை நன்கொடையாக வழங்கியது.

திருச்சிலுவை சுகநலவைத்தியசாலை, திருச்சிலுவை நடமாடும் சுகாதார நிலையம், தெல்லிப்பளை கூட்டுறவு சமூக சுகாதார நிலையம், திருநெல்வேலி சென்றல் நேர்ஸிங்கோம், வண்ணார்பண்ணை மேற்குவைத்தியசாலை, மூளாய் வைத்தியசாலை, தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய அகதிகள்முகாம் ஆகியவையே டீசல் பெற்ற நிறுவனங்கள் ஆகும். [இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயோத்தி நோக்கி செல்ல முயன்ற தொண்டர் தடுத்து நிறுத்தப்பட்டனர்

## ராமர் ஆலய வேலை ஆரம்பிப்பது பிசுபிசுப்பு

புதுடில்லி, அக். 31
அயோத்தியில் பிரச்சினைக்குரிய ராமர் ஆலயத்தைக் கட்டும் வேலை நேற்றுக் காலை திட்டமிட்டபடி விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்களால் ஆரம்பிக்கப்படவில்லை.

ஆலயம் கட்டும் இடத்துக்கு விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் போக பாதுகாப்புப் படையினர் அனுமதிக்கவில்லை.

சரயு ஆற்றின் பாலத்தடியில் வைத்து சுமார் பத்தாயிரம் விஸ்வ இந்து பரிஷத் தொண்டர்களைப் பாதுகாப்புப் படையினர் தடுத்துநிறுத்தினர். அப்போது தொண்டர்கள் தடையை மீறி அயோத்தி நோக்கிச் செல்ல முயற்சிக்கையில், பாதுகாப்புப்படையினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வெடிக்க வைத்தும் குண் ாந்தடிப் பிரயோகம் செய்தும் அவர்களைத் தடுத்தனர்.

அச்சமயம் விஸ்வ இந்து பரிஷத் பொதுச் செயலாளர் நாயகம் அசோக் சின்ஹா காயமடைந்தார். அவரைப் பொலீஸார் தங்கள் பாதுகாப்பில் வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர். [இ-எ]

## ஆசிரியர்களின் அக்டோபர் சம்பளம்

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான அக்டோபர் மாத சம்பளக் காசோலைகள் யாவும் கல்விக்கோட்டங்களூடாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன.

வட பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார். (இ-6)

## ஏழு ஹெலிகள்

ஆனையிறவு, அக். 31
நேற்று முன்தினம் [திங்கட்கிழமை] காலை 10 மணியளவில் யாழ்ப்பாணப் பக்கமாக இருந்து பறந்து வந்த ஏழு ஹெலிகள் ஆனையிறவு இராணுவ முகாமில் தரையிறங்கின.

அவை பின்னர் அங்கிருந்து மன்னார்ப் பகுதியை நோக்கிப் பறந்து சென்றன. [அ-5]

## பல்கலைக்கழக ஊழியரை சமூகம் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 31
யாழ் பல்கலைக்கழகம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகிறது. எனவே நாளை முதலாம் திகதி தொடக்கம் சகல தற்காலிக விரிவுரையாளர்களும், செய்முறைக் காட்டுனர்களும் கடமைக்குத் திரும்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான பீட தற்காலிக உதவி விரிவுரையாளர்கள், செய்முறைக் காட்டுனர்களுக்கு மீண்டும் நியமனக் கடிதங்கள் அவர்களுடைய நிரந்தர விலாசங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஜூன் 28, ஜூலை 2 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் நியமனம் பெற்றுள்ள கலைப்பீட தற்காலிக உதவி விரிவுரையாளர், கட்டுரை ஆசிரியர்கள் தற்காலிக செய்முறைக் காட்டுனர்கள் ஆகியோருக்கான நியமனக் கடிதங்களும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இந்த நேர்முகப் பரீட்சையில் தோற்றியவர்கள் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் தாபனத்திலிருந்து பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## பணம் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், அக். 31
பருத்தித்துறைக்கு நேற்று முன்தினம் வந்த கப்பலில் இலங்கை வங்கிக்கு என எடுத்துவரப்பட்ட 50 லட்சம் ரூபா பணம் அந்த வங்கியில் கணக்கு வைத்துள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு நேற்று பருத்தித்துறையில் வைத்தே வங்கி அதிகாரிகளால் பகிர்ந்தளிக்கப்பட்டது (உ-6)

## அல்லைப்பிட்டி நாவாந்துறை படகுச்சேவை

மண்டைதீவு, அக். 31
அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்களின் நன்மை கருதி அல்லைப்பிட்டியிலிருந்து நாவாந்துறை வரையிலான படகுச் சேவை ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (இ-88)

## இந்திரா நினைவு தினம்

புதுடில்லி, அக். 31
இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் ஆறாவது நினைவுதினம் இன்றாகும். (அ-எ)

### ஆஸ்பத்திரிக்குள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் மட்டுமே அனுமதிக்கப்படும். வேறு எந்த வாகனங்களும் அனுமதிக்கப்பட மாட்டா.

★ ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக உள்ள விக்ரோரியா வீதி வாகனப்போக்குவரத்துக்குத் தடை செய்யப்படும்.

இறந்தவர்களது சடலங்களை எடுத்துப்போக வரும் வாகனங்களும், ஆஸ்பத்திரி கழிவுகளை அகற்றும் யாழ். மாநகரசபை வாகனங்களும் மட்டுமே இந்த வீதியால் செல்ல அனுமதிக்கப்படும். (அ-5-3)

## இடம்பெயர்ந்தோர் வீடுகளில் திருடர்கள் கைவரிசை

மல்லாகம், அக் 31
கட்டுவன், குரும்பசிட்டி, மல்லாகம், ஏழாலை, குப்பிளான் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களின் வீடுகளில் இருந்து பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வீடுகளைப் பார்க்கச் சென்ற பலர் தமது வீடு உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

## பாடவிதான கைநூல் வார இறுதிக்குள் பூர்த்தி

யாழ். மாவட்ட மாணவர்கள் இழந்த கல்வியை ஈடு செய்யக்கூடிய விதத்தில் 10 வார காலத்தில் போதிக்கக்கூடிய பாடவிதான கைநூல் தயாரிக்கப்படும் வேலைகள் இவ்வார இறுதிக்குள் முடிவடைந்து விடும்.

யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

குறுகியகால பாடவிதானம் சம்பந்தமாக பாடசாலை சேவைக்கால ஆலோசகர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்று யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இவ்வாறு இறுதிக்குள் கைநூல் வேலைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என முடிவாகியது.

தற்போதையவிமானத்தாக்குதல்கள் காரணமாக மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்ல அச்சமடைந்துள்ளனர்.

இதனால் கிராம ரீதியில் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து அண்மையில் உள்ள பொது இடங்கள், ஆலயங்கள் என்பவற்றில் இந்தப் பாடத் திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டது. (இ-6)

## மாங்குளம் தபாலகம் நாளை முதல் ஒலுமடுவில்

மாங்குளம், அக். 31
மாங்குளம் தபாலகம் நாளை முதலாம் திகதி முதல் ஒலுமடுவில் இயங்க உள்ளது.

நான்கு மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டுக் கிடந்த இத்தபாலகத்தை ஒலுமடுவுக்கு இடம்மாற்றும் நடவடிக்கையை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் மேற்கொண்டார்.

மாங்குளம் தபாலகம் இயங்காததால் மாங்குளத்துக்கான தபால் பொதிகள் பல புதுக்குடியிருப்பு தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. (இ 94)

## அமெரிக்கா - பாக். லடாய்!

புதிய கடன் தராவிட்டால் ஏற்கனவே பெற்ற கடனை திருப்பிச் செலுத்தப்போவது இல்லை என்று அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கான 60 கோடி டொலர் பெறுமதியான இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது தெரிந்ததே.

அணுக்குண்டு தயாரிப்பில் பாகிஸ்தான் ஈடுபடவில்லை என்பதை உறுதிப்படுத்தி அமெரிக்கஜனாதிபதிஜோர்ஜ் புஷ் அத்தாட்சிப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்க முன்வராததைத் தொடர்ந்தே, அமெரிக்க காங்கிரஸ் பாகிஸ்தானுக்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்தியது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்தே, நிறுத்தப்பட்ட புதிய கடனை வழங்காவிடில், பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தப் போவதில்லை என்று தனது அரசு முடிவுசெய்துள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் நேற்று அறிவித்தார். (உ-எ)

## வவுனியாவிலும் டீசல் இல்லை; காலபோகச் செய்கை தடை

வவுனியா, அக். 31
வவுனியா மாவட்டத்திலும் டீசல் தட்டுப்பாடு நிலவுகிறது. அதனால் காலபோக நெற்பயிர்ச் செய்கைக்கான வேலைகளைச் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் பருவமழை தொடங்கியுள்ள இவ்வேளையில் உழவு இயந்திரங்களுக்குத் தேவையான டீசலைப் பெறமுடியாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக, காணிகளின் பரப்பளவு, உழவு இயந்திரங்களின் எண்ணிக்கை என்பன திரட்டப்படுகின்றன. ஆனால் எரிபொருள், பசளை, விதை தானியம் எதுவும் வழங்கப்படவில்லை. (அ-5)

## அத்வானி உண்ணாவிரதம்

புதுடில்லி, அக். 31
காவலில் வைக்கப்பட்டுள்ள பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் லால்கிஷன் அத்வானி நேற்று 24 மணி நேர உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பித்தார்.

ராமர் ஆலயம் கட்டுவதற்கு அயோத்தி நோக்கிச் சென்ற தொண்டர்களை அரசு நடத்திய விதத்தைக் கண்டித்தே அவர் உண்ணாவிரதம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.


தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

**விசேட பொதுக்கூட்டம்**

காலம் : 2 11-90. (வெள்ளிக்கிழமை)
நேரம் : முற்பகல் 10 மணி
இடம் : யா/மங்கையர்க்கரசி வித்தியாசாலை
(நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமை)

உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

— செயலாளர்

(சி/5359)



**தேவை**

எமது சங்கத்தினால் செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழுவின் அனுசரணையுடன் நடத்தப்படும் நடமாடும் சுகாதார சேவைக்கு யாழ்., முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்ற தகைமையுள்ள பின்வரும் பணியாளர்கள் தேவை:

1. வைத்திய அதிகாரி / உதவி வைத்திய உத்தியோகத்தர்.
2. சுகாதார போதனாசிரியர்.
3. கிராமிய சுகாதார உதவியாளர் / தாதி உத்தியோகத்தர்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி;
தலைவர்,
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்,**

விண்ணப்பங்கள் யாவும்
02 - 11 - 1990 க்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
[யாழ்ப்பாணப் பிரிவு]

(சி-5353)



**மரண அறிவித்தல்**

**திரு. கந்தையா கணேசபிள்ளை**

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் சங்கிலியன் வீதியில் வசிப்பவருமாகிய திரு. சந்தையா கணேசபிள்ளை காலமாகிவிட்டார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவராவார்.

நேற்றைய உதயனில் வெளியான மரண அறிவித்தலில் மனைவியின் பெயர் விவரம் தவறுதலாக விடுபட்டுவிட்டது.



**மரண அறிவித்தல்**

**K. C. பத்மநாபன்**

திரு. சி. அ. கந்தையா செட்டியாரின் மூத்த புதல்வர் K. C. பத்மநாபன் 29 10-1990 இல் காலமானார். அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும், யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரியின் காரியாலயத்தில் வேலை செய்து ஓய்வுபெற்ற லிகிதருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-10-90 திங்கட்கிழமை நடைபெற்றது.

நம்பர் : 6,
கன்னாதிட்டி றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

[14270]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org